# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 742/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : ஆனந்தன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2, 3, 4present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் செலவடை கிராமத்தில் குடியிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். தன்ராஜ் என்பவரையும் தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மந்தமான பிரச்சனை உள்ளது. எதிரிகள் என் உறவு முறைகள் தான். சமீபத்தில் மணியிடம் என் சித்தப்பா மகன் ராஜூவ் காந்தி என்பவர் பிரச்சனை செய்தது சம்மந்தமாக மணி ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தது சம்மந்தமாகவும் பிரச்சனை உள்ளது. நீ சொல்லி தான் மனு கொடுத்தது சம்மந்தமாக முன்விரோதம் உள்ளது.

2) கடந்த 30.05.2025ம் தேதி நான் காட்டில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். காலை 6 மணி சுமாருக்கு எதிரிகள் நால்வரும் தகாத வார்த்தையால் தெவிடியா கண்டாரஒலி பையா, கண்டவனுக்கு பிறந்தவன், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொடுவாளோடு வந்தார்கள். வழக்கு போட்டதற்கு நீ தான் காரணம் என்று என்னிடம் பிரச்சனை செய்தார்கள். தன்ராஜ், முருகேசன் இருவரும் கையால் என் தலை மீது அடித்தார்கள்.

3) முருகேசன் என்பவர் தடியை எடுத்து என் இடது கால் தொடை மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். நான் குனிந்த போது முதுகு, இடுப்பு பகுதியில் அடித்தார். மோகனா அன்பரசு இருவரும் கல்லை எடுத்து என் கை கால், வலது முழங்கால்,

வலது கால் சுண்டுவிரல் ஆகிய பகுதியில் அடித்தார்கள். அன்பரசன் என் செல்போனை பிடுங்கி கீழே போட்டு உடைத்துவிட்டார். தன்ராஜ் கொடுவாளை எடுத்து என் கழுத்தின் மீது வெட்டும் போது நான் சாய்ந்த போது கீரல் பட்டு ரத்தம் வந்தது. பிறகு என் இடது காலை பாதத்தில் கொடுவாளை கொண்டு குத்தி காயம் ஏற்பட்டது.

4) இன்றைக்கு நீ தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று முருகேசன் மிரட்டினார். பிறகு என் மகன் இரு சக்கர வாகனத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தார்கள். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். திறந்த நீதிமன்றத்தில் காட்டப்படும் தடியால் தான் என்னை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். தடி **சா.பொ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் மற்றும் ஒரு தன்ராஜ் என்பவர் தான் என்னை அடித்தார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:56:06 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 742/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : முருகேசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2, 3, 4present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடை கிராமத்தில் குடியிருந்து செய்திதாளில் கணக்காளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என் உறவினர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். தன்ராஜ் என்பவரையும் தெரியும். அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே நிலம் சம்மந்தமான பிரச்சனை உள்ளது.

2) கடந்த 30.05.2025 ம் தேதி அ.சா.1 காட்டில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். அப்போது காலை 6 மணி சுமாருக்கு எதிரிகள் நால்வரும் தகாத வார்த்தையால் தெவிடியா கண்டாரஓலி பையா, என்று பேசினார்கள். தன்ராஜ், முருகேசன் இருவரும் கையால் அ.சா.1 ன் தலை மீது அடித்தார்கள்.

3) முருகேசன் என்பவர் தடியை எடுத்து அ.சா.1 இடது கால் தொடை மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். மோகனா அன்பரசு இருவரும் கல்லை எடுத்து அ.சா.1 ன் உடம்பில் அடித்தார்கள். தன்ராஜ் கொடுவாளை எடுத்து அ.சா.1 ன் கழுத்தின் மீது வெட்டும் போது அவர் சாய்ந்த போது கீரல் பட்டு ரத்தம் வந்தது.

4) பிறகு அ.சா.1 ன் மகன் இரு சக்கர வாகனத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தார்கள். திறந்த நீதிமன்றத்தில் காட்டப்படும் தடியால் தான் அ.சா.1 யை அடித்தார்களா என்றால் ஆமாம். ஆஜர் எதிரிகள் மற்றும் ஒரு தன்ராஜ் என்பவர் தான் அ.சா.1 யை அடித்தார் என்று

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:56:13 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 742/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : தங்கம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2, 3, 4present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 30.05.2025ம் தேதி அ.சா.1 காட்டில் காலை 6 மணிக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். எதிரிகள் நால்வரும் தகாத வார்த்தையால் தெவிடியா கண்டாரஓலி பையா, என்று பேசினார்கள்.

2) முருகேசன் என்பவர் தடியை எடுத்து அ.சா.1 இடது கால் தொடை மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். பிறகு அ.சா.1 குனியும் போது அவர் இடுப்பு மற்றும் முதுகில் அடித்தார்கள். மோகனா அன்பரசு இருவரும் கல்லை எடுத்து அ.சா.1ன் உடம்பில் அடித்தார்கள். தன்ராஜ் கொடுவாளை எடுத்து அ.சா.1ன் கழுத்தின் மீது வெட்டும் போது அவர் சாய்ந்த போது கீரல் பட்டு ரத்தம் வந்தது.

4) பிறகு அ.சா.1ன் மகன் இரு சக்கர வாகனத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தார்கள். என்றைக்கு இருந்தாலும் என் கையில் தான் சாவு என்று சொன்னார்கள். திறந்த நீதிமன்றத்தில் காட்டப்படும் தடியால் தான் அ.சா.1யை அடித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் மற்றும் ஒரு தன்ராஜ் என்பவர் தான் அ.சா.1யை அடித்தார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:56:19 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 742/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : தமிழரசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2, 3, 4present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சோடையூரில் கிராமத்தில் குடியிருந்து அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியர் ஆவேன். அசா.1 என் அப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். தன்ராஜ் என்பவரையும் தெரியும். பக்கத்து வீட்டை சேர்ந்த மணி என்பவருடைய திண்ணையையும் வீட்டையையும் இடித்துவிட்டார்கள். இது சம்மந்தமாக மணி என்பவர் ராஜூவ் காந்தி என்பவர் பிரச்சனை செய்தது சம்மந்தமாக ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்திருந்தார். அது சம்மந்தமாகவும் பிரச்சனை உள்ளது.

2) கடந்த 30.05.2025 ம் தேதி அ.சா.1 பாறைகாட்டில் காலை 6 மணிக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். நான் அந்த சமயத்தில் வீட்டிலிருந்த போது வீட்டிற்கு அருகில் உள்ள பாறைகாட்டில் சம்பவம் நடந்தது. நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். எதிரிகள் நால்வரும் தகாத வார்த்தையால் தெவிடியா கண்டாரஓலி பையா என்று திட்டினார்கள். ராஜூவ் காந்தியை கைது செய்ததற்கு நீ தான் காரணம் என்றும் அ.சா.1 யை திட்டினார்கள். தன்ராஜ், முருகேசன் இருவரும் கையால் அ.சா.1 ன் தலை மீது அடித்தார்கள்.

3) முருகேசன் என்பவர் தடியை எடுத்து அ.சா.1 இடது கால் தொடை, முதுகு மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். மோகனா அன்பரசு இருவரும் கல்லை எடுத்து

அ.சா.1ன் கை கால், வலது முழங்கால், வலது கால் சுண்டுவிரல் ஆகிய பகுதியில் அடித்தார்கள். அன்பரசன் அ.சா.1 செல்போனை பிடுங்கி கீழே போட்டு உடைத்துவிட்டார். தன்ராஜ் கொடுவாளை எடுத்து அ.சா.1 கழுத்தின் மீது வெட்டும் போது என் அப்பா சாய்ந்த போது கீரல் பட்டு ரத்தம் வந்தது.

4) இன்றைக்கு நீ தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று தன்ராஜ் மற்றும் மூன்று நபர்கள் மிரட்டினார். பிறகு நான் என் தகப்பனாரை இரு சக்கர வாகனத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்தகப்பனாரிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நடந்த விவரத்தை சொன்னோம். திறந்த நீதிமன்றத்தில் காட்டப்படும் தடியால் தான் என் தகப்பனாரை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். ஆஜர் எதிரிகள் மற்றும் ஒரு தன்ராஜ் என்பவர் தான் என்னை அடித்தார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:56:25 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 742/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 02.12.2025.**

| | |
|---|---|
| **Name : பாக்கியம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused 2, 3, 4present. ) (Accused 1 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் சோலையூர் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என் கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பக்கத்து வீட்டை சேர்ந்த மணி என்பவருடைய வீட்டை இடித்ததால் மணி என்பவர் ராஜுவ் காந்தி என்பவர் பிரச்சனை செய்தது சம்மந்தமாக ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்திருந்த சமயத்திலிருந்து பிரச்சனை உள்ளது.

2) கடந்த 30.05.2025ம் தேதி அ.சா.1 பாறைகாட்டில் காலை 6 மணிக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார். நான் மற்றும் என் மகன் அந்த சமயத்தில் வீட்டிலிருந்த போது சம்பவத்தை நேரில் பார்த்தேன். எதிரிகள் நால்வரும் தகாத வார்த்தையால் தெவிடியா கண்டாரஒலி பையா என் கணவரை திட்டினார்கள்.

3) முருகேசன் என்பவர் தடியை எடுத்து அ.சா.1 இடது கால் தொடை, முதுகு மீது அடித்து காயம் ஏற்படுத்தினார். மோகனா அன்பரசு இருவரும் கல்லை எடுத்து அ.சா.1ன் கை கால் ஆகிய பகுதியில் அடித்தார்கள். தன்ராஜ் கொடுவாளை எடுத்து அ.சா.1 கழுத்தின் மீது வெட்டும் போது என் கணவர் சாய்ந்த போது கீரல் பட்டு ரத்தம் வந்தது.

4) பிறகு நான் என் கணவரை என் மகன் இரு சக்கர வாகனத்தில் ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தார். கடந்த 10.06.2025ம்

தேதி காலை 9 மணிக்கு சம்பவம் நடந்த பாறைக்காட்டில் நான் மற்றும் காவியா இருவரும் இருந்த போது ஜலகண்டாபுரம் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதிலுள்ள விவரம் எனக்கு தற்போது நினைவில்லை. கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். அதேநாள் பிறகு 10.30 மணிக்கு சம்பவயிடத்திலிருந்து தடி ஒன்றை கைப்பற்றினார்கள்.

5) அப்போது நான் மற்றும் காவியா இருவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். அதிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் **அ.சா.ஆ.3** ஆகும். திறந்த நீதிமன்றத்தில் காட்டப்படும் தடியால் தான் என் கணவரை அடித்தார்கள் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். ஆஜர் எதிரிகள் மற்றும் ஒரு தன்ராஜ் என்பவர் தான் என்னை அடித்தார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**இல்லை.

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.12.02 17:56:30 +0530

Judicial Magistrate No.II,
Mettur.